**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை**

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.

2026 ஆம் வருடம் ஜுன் திங்கள் 25 ஆம் நாள் வியாழக்கிழமை

விசுவாவசு வருடம் ஆனி மாதம் 11 ஆம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்:12/2016

**முடீஸ் காவல் நிலைய குற்ற எண் :67/2015**

CNR NO: TNCB150001082016

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:- காவல் ஆய்வாளர்,
முடீஸ் காவல் நிலையம், குற்ற எண்:67/2015.

எதிரியின் பெயர் : போஸ், த/பெ. டேவிட்,
புதுப்பாடி குவாட்டர்ஸ், ஈட்டியார் டிவிசன், முடீஸ்,
வால்பாறை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | | |
| வ. எண் | வழக்கின் சுருக்கம் | | | | | |
| (i) | எதிரியின் அடைப்பு காவல் நாட்கள் | : | எதிரியின் பெயர் | | அடைப்பு காவல் நாள் | விடுவிப்பு நாள் |
| | | | 1 | போஸ் | - | - |
| (ii) | புகார் தாக்கல் செய்த நாள் | : | புகார் தாக்கல் செய்த நாள் | | இறுதி அறிக்கை | |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:19 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | | | நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | |
| | | | 06.11.2015 | 31.05.2016 | |
| (iii) | மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள் | : | - | | |
| (iv) | கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள் | : | 22.06.2026 | | |
| (v) | அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழான மனுவை தவிர. | : | குற்றவியல் பல்வகை மனு எண் . | மனு நாள் | முடிவு |
| | | | | | - |
| (vi) | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர் | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
| | | | அ.சா.1 கனகவள்ளி | 23.06.2026 | 23.06.2026 |
| | | | அ.சா.2 ஜான்சி | 23.06.2026 | 23.06.2026 |
| | | | அ.சா.3 நல்லதம்பி | 23.06.2026 | 23.06.2026 |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:27 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அ.சா.4 | வடிவேல் | 23.06.2026 | 23.06.2026 |
| (vii) | கு.வி.மு.ச பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 24.06.2026 | | | |
| (viii) | எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | : | - | | | |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்கள் | | உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் | முடிவு |
| | | | - | | - | - |
| (x) | குற்றச்சாட்டு | : | 04.11.2015-ம் தேதி மாலை 06.30 மணிக்கு முடீஸ் காவல் நிலைய சரகம், ஈட்டியார் டிவிசன், கல்லார் எஸ்டேட், புதுப்பாடி குவாட்டர்ஸில் எதிரியின் வீட்டு வாசலில் பொது வழித்தடத்தில் வந்து நின்று எதிரியின் மனைவி பிரியாவிடம் தரவேண்டிய பணத்தை கேட்ட வாதியை பார்த்து, எதிரி " வீடேறி பணம் கேட்க வந்துட்டியாடி தேவிடியா" என்று அருவறுக்க தக்கவாறு சத்தம் போட்டு அதனால் வாதிக்கு அவமானத்தை ஏற்படுத்தியும், எதிரி கீழே கிடந்த விறகுத் தடியால் சாட்சி1-ன் தலையின் இடது காதிலும், இடது காலிலும் அடித்து, சாதாரண காயங்கள் ஏற்படுத்தியும், அதை தடுக்க முயன்ற வாதியின் மகள் ஜான்சியை அதே விறகுத் தடியால் அடித்ததில் இடது கண்ணுக்கு மேல் சாதாரண காயம் ஏற்படுத்தியதாக இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் கீழ் | | | |
| (xi) | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை, பொய் வழக்கு. | | | |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:32 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

| | | | |
|---|---|---|---|
| (xii) | நீதிபதியின் முடிவு | : | எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் -ன் கீழான குற்றச்சாட்டுகள் பொறுத்து குற்றவாளி இல்லை என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையிலும், வழக்கு சான்றாவணங்களை உறுதியூட்டும் வகையிலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச.பிரிவு. 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படுகிறது.<br><br>2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. |
| | | | |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:44 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 24.06.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.பால்பாண்டி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1. இவ்வழக்கில் கடந்த 04.11.2015-ம் தேதி மாலை 06.30 மணிக்கு முடீஸ் காவல் நிலைய சரகம், ஈட்டியார் டிவிசன், கல்லார் எஸ்டேட், புதுப்பாடி குவாட்டர்ஸில் எதிரியின் வீட்டு வாசலில் பொது வழித்தடத்தில் வந்து நின்று எதிரியின் மனைவி பிரியாவிடம் தரவேண்டிய பணத்தை கேட்ட வாதியை பார்த்து, எதிரி " வீடேறி பணம் கேட்க வந்துட்டியாடி தேவிடியா" என்று அருவறுக்க தக்கவாறு சத்தம் போட்டு அதனால் வாதிக்கு அவமானத்தை ஏற்படுத்தியும், எதிரி கீழே கிடந்த விறகுத் தடியால் சாட்சி1-ன் தலையின் இடது காதிலும், இடது காலிலும் அடித்து, சாதாரண காயங்கள் ஏற்படுத்தியும், அதை தடுக்க முயன்ற வாதியின் மகள் ஜான்சியை அதே விறகுத் தடியால் அடித்ததில் இடது கண்ணுக்கு மேல் சாதாரண காயம் ஏற்படுத்தியதாக இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றமிழைத்திருப்பதாக முடீஸ் உதவி ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு 173(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 02.06.2016-ம் தேதி அன்று ஆண்டுபட்டிகை வழக்கு எண்.12/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204-ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.பிரிவு.207-ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய, முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் கு.வி.மு.ச.பிரிவு 240-ன் படி இ.த.ச.பிரிவுகள் 294(b), 324(2 counts)-ன் கீழ் குற்றச்சாட்டு

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:51 +0530

25.06.2026 DM Cum JM
Valparai

வனைந்து, எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டை படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

5. கடந்த 05.11.2015-ம் தேதி உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி 8 முடீஸ் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1-ஐ விசாரணை செய்து, அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண்.67/2015, இ.த.ச.பிரிவுகள் 294(b), 324-ன் படி அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி 6 ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, பட்டியல் சாட்சி 3, பட்டியல் சாட்சி 4, அ.சா.3, பட்டியல் சாட்சி 6 ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை காரணம் கூறி கைது செய்தவரை நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் காயம் பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பட்டியல் சாட்சி 7-ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கான அ.சா.ஆ-9 மற்றும் அ.சா.ஆ.10 காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார். மருத்துவர் காயச்சான்றுகளை சாதாரண காயங்கள் என சான்று வழங்கியுள்ளார். இத்துடன் புலன்விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். புலன்விசாரணை குறித்து அ.சா.4-ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 15:59:57 +0530

25.06.2026 DM Cum JM
Valparai

6. அரசு தரப்பு சாட்சிகள் முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சிகளை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1) (b)-ன் கீழ் விசாரணை செய்த போது எதிரி அரசு தரப்பு சாட்சிங்கள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்று தெரிவித்து எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லலை எனவும் தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இரு தரப்பு வாதங்கள் கேட்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.**

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 (2counts)-ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>** :-

9. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில்,

கடந்த 04.11.2015-ம் தேதி மாலை 06.30 மணிக்கு ஈட்டியார் டிவிசன், கல்லார் எஸ்டேட், புதுப்பாடி குவாட்டர்ஸில் எதிரியின் வீட்டு வாசலில் பொது வழித்தடத்தில் வந்து நின்று எதிரியின் மனைவி பிரியாவிடம் தரவேண்டிய பணத்தை கேட்ட அ.சா.1-ஐ பார்த்து, எதிரி " வீடேறி பணம் கேட்க வந்துட்டியாடி தேவிடியா" என்று அருவறுக்க தக்கவாறு சத்தம் போட்டு அதனால் அ.சா.1-க்கு அவமானத்தை ஏற்படுத்தியும், எதிரி கீழே கிடந்த விறகுத் தடியால் அ.சா.1-ன் தலையின் இடது காதிலும், இடது காலிலும் அடித்து, சாதாரண காயங்கள் ஏற்படுத்தியும், அதை தடுக்க முயன்ற அ.சா.1-ன் மகள் அ.சா.2-ஐ அதே விறகுத் தடியால் அடித்ததில் இடது கண்ணுக்கு மேல் சாதார காயம் ஏற்படுத்தியதாக இ.த.ச.பிரிவுகள் 294(b), 324 (2 counts) -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமிழைத்திருப்பதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 16:00:03 +0530

25.06.2026 DM Cum JM
Valparai

10. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

11. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரியும், அவரது தங்கையும் புகார்தாரருமான அ.சா.1 மற்றும் அ.சா.2 சமாதானமாக சென்றுவிட்டார்கள். அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென வாதம் முன் வைத்தார்.

12. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1-ம் , அ.சா.2-ம் காயம்பட்ட/ பாதிக்கப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். அ.சா.1, அ.சா.2-ன் தாய் ஆவார். அ.சா.1, அ.சா.2 தங்கள் சாட்சியத்தில், எதிரி தங்களது உறவினர் என்றும், சம்பவதினத்தன்று எதிரி வீட்டிற்கு சென்று, நகை பற்றி கேட்ட போது, எதிரி அடிக்க முற்பட்டதாகவும், அதில் தங்களாக கீழே விழுந்து, அ.சா.1-க்கு காலில் அடிப்பட்டதாகவும், அ.சா.2-க்கு வலது கண்ணிற்கு மேல் காயம் ஏற்பட்டதாகவும், எதிரியுடன் சமாதானமாக சென்றதால் நடவடிக்கை வேண்டாம் என்றும், சமாதான மனுவிலுள்ள அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 கையொப்பத்தை தங்களுடையது என ஒப்புக்கொண்டு பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள்.

13. இவர்களது சாட்சியத்தில், எதிரி அருவறுக்க தக்க வார்த்தைகளால் பொது இடத்தில் வைத்து, அசிங்கமாக பேசியதாகவோ, அதனால் யாருக்கும் தொல்லை ஏற்பட்டதாகவோ, எதிரி அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை விறகு தடியால் அடித்து, காயம் ஏற்பட்டதாகவோ இல்லை.

14. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3, பார்வை மகஜரிலுள்ள அ.சா.ஆ.4 கையொப்பத்தை ஒப்புக்கொண்டு, போலீசார் ஈட்டியார் எஸ்டேட் கோவிலில் வந்து விசாரணை செய்து, தன்னிடம் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்து வந்ததால், தன்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்தார்கள் என்று தனக்கு தெரியாது என்று அரசு

தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 புலன் விசாரணை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் முக்கிய சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 அரசு தரப்பிற்கு விரோதமாகவும், எதிரியுடன் சமாதானமாக செல்வதால் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று பிறழ்சாட்சியமளித்தும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 அரசு தரப்பிற்கு விரோதமாக பிறழ்சாட்சியமளித்தும், அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் அரசு தரப்பில் நீதிமன்ற அனுமதி பெற்று, குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக இவர்களது சாட்சியம் இல்லாத நிலையில், புலன் விசாரணை குறித்து, ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்து அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ததாக கருத இயலாது.

16. **இறுதியாக,**

1. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையிலும், வழக்கு சான்றாவணங்களை உறுதியூட்டும் வகையிலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 (2 Counts)-ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச.பிரிவு. 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 16:00:17 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 -ம் ஆண்டு ஜுன் மாதம் 25-ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 16:00:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| அ.சா.1 | கனகவள்ளி |
| அ.சா.2 | ஜான்சி |
| அ.சா.3 | நல்லதம்பி |
| அ.சா.4 | வடிவேல் (உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்** :-

1. அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – சமாதான மனுவிலுள்ள புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – சமாதான மனுவிலுள்ள புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம்
4. அ.சா.ஆ.4 – பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம்
5. அ.சா.ஆ.5 – புகார் வாக்குமூலம்
6. அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை
7. அ.சா.ஆ.7 – மாதிரி வரைபடம்
8. அ.சா.ஆ.8 – பார்வை மகஜர்
9. அ.சா.ஆ.9 – கனகவள்ளியின் காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு
10. அ.சா.ஆ.10 – ஜான்சியின் காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு

**சான்றுப் பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்**:- இல்லை.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.06.25 16:00:30 +0530

25.06.2026

DM Cum JM
Valparai

**<u>குறிப்பு:-</u>**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், கோயம்புத்தூர்- அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.06.25 16:00:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,வால்பாறை.